(எட்டாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர் )

இல. 1.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் புத்தகம்

**2020 சனவரி 21, செவ்வாய்க்கிழமை உட்பட அன்றைய தினத்திலிருந்து**
**2020 சனவரி 03, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது**

## 2020 சனவரி 21, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1/ '20

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மருத்துவர்களின் பெயரில் இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கை முழு நேர மற்றும் பகுதி நேர என்ற வகையில் பதிவு செய்துள்ள விதத்திற்கிணங்க தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மருத்துவர்களுக்கு சொந்தமான தனியார் மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கை தொடர்பாக இறுதியாக கணக்கெடுப்பு மேற்கொண்ட திகதி யாதென்பதையும்;

(ii) மீண்டும் கணக்கெடுப்பு மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில் அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பதிவுச் சான்றிதழ் இல்லாமல் தனியார் மருத்துவ நிலையங்களை நடாத்துவதற்கு எதிராக எடுக்கக்கூடிய சட்டரீதியான நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் சட்டத்தின் முன் கொண்டுவரப்பட்ட பதிவு செய்யப்படாத மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

41/ '20

கௌரவ சமிந்த விஜேசிறி,— சுற்றுலா மற்றும் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி தாபிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியின் ஆரம்ப நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி தாபிக்கப்பட்ட திகதி தொடக்கம் இறுதி பணிப்பாளர் சபை வரை அதன் பணிப்பாளர் சபையிலிருந்த ஆட்களின் பெயர்கள், முகவரிகள், கல்வித் தகைமைகள் மற்றும் பெற்றுள்ள சம்பளங்கள் மற்றும் ஏனைய அனுகூலங்கள் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iv) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி ஆரம்பம் தொடக்கம் அடைந்துள்ள நட்டமானது வருடாந்தம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(v) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியானது கடன் பெற்றுள்ள அரச நிறுவனங்கள் மற்றும் கடன் செலுத்தவுள்ள அரச நிறுவனங்கள் மற்றும் அக்கடன் தொகைகள் யாவை என்பதையும்;

(vi) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியின் எதிர்காலம் தொடர்பாக அரசாங்கம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

69/ '20

கௌரவ ஹேசா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரிவெனாக் கல்வி நிறுவனங்களுக்கான ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்கையில் கவனத்திற் கொள்ளப்படுகின்ற அடிப்படை கல்வித்தகைமைகள் யாவை;

(ii) தற்போது பிரிவெனாக் கல்வி நிறுவனங்களில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதா;

(iii) ஆமெனில் மேற்படி பற்றாக்குறை நிலவுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

(iv) கல்வி அமைச்சின் பிரிவெனாக் கல்விக் கூறு மூலமாக பிரிவெனாக் கல்வியை மேம்படுத்த மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

2/ '20

கௌரவ புத்திக பத்திரண,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி சர்வதேச கிறிக்கெட் மைதானத்தின் விளையாட்டரங்கு பழுதடைந்த நிலையில் உள்ளதென்பதையும்;

(ii) உரிய பராமரிப்பு இல்லாமையினால் எதிர்காலத்தில் சர்வதேச போட்டிகளை நடத்த முடியாத நிலை ஏற்படலாம் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) காலி சர்வதேச கிறிக்கெற் மைதானத்தில் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட சர்வதேச கிறிக்கெற் போட்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி போட்டிகளின் மூலமாக கிடைத்த வருமானம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வருடங்களில் மைதானத்தின் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ஒவ்வொரு வருட ரீதியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி மைதானத்தின் அபிவிருத்தி பணிகளுக்காக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

42/ '20

கௌரவ சமிந்த விஜேசிறி,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள உள்நாட்டுப் பால்மா தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்தத் தொழிற்சாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(iii) 2015 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை அந்த தொழிற்சாலைகளின் உற்பத்தி அளவு ஒவ்வொரு வருடத்திற்கமைய எவ்வளவென்பதையும்;

(iv) தற்போது ஊவா மாகாணத்தின் உள்நாட்டுப் பால்மா உற்பத்தித் தொழிற்சாலைகள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அமைச்சு எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

70/ 20

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இது வரை பதிவுசெய்யப்பட்டுள்ள அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற பிரதிப் பயன்கள் யாவை என்பதையும்;

(iii) அறநெறிக் கல்வியை மேம்படுத்த மேற்படி தன்னார்வ அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்காக திட்டமிடப்பட்டுள்ள எதிர்கால வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2020 சனவரி 22, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

3/ '20

கௌரவ புத்திக பத்திரண,— உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கட்டார் அரசின் நகர மற்றும் சுற்றாடல் அமைச்சு, (MME) அந்த அரசில் பணியாற்றுகின்ற அனைத்து பொறியியல் தொழில்வாண்மையாளர்களும் அந்த அமைச்சின் கீழ் பதிவு செய்து கொள்ள வேண்டுமென புதிய ஒழுங்குவிதியொன்றை விதித்துள்ளதென்பதையும்;

(ii) பதிவு செய்து கொள்ளாத தொழில்வாண்மையாளர்கள் மூன்று வருடகால சிறை தண்டனைக்கு அல்லது 100,000 றியால் தண்டப்பணத்திற்கு ஆளாவர் எனவும்;

(iii) இலங்கையும் இந்த MME அனுமதியை சில கல்வி நிறுவனங்களுக்கு மாத்திரம் பெற்றுக்கொண்டுள்ளது என்பதையும்;

(iv) இலங்கைக்குள் இந்த MME பட்டியலில் சேர்த்துக் கொள்ளக்கூடிய மேலும் சில நிறுவனங்கள் இருக்கின்றதன என்பதையும்;

(v) இந்தியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் தரத்தில் குறைந்த நிறுவனங்களைக் கூட இந்த பட்டியலில் சேர்த்துக்கொண்டதால் எமது நாட்டின் தொழில்வாண்மையாளர்களின் தொழில்வாய்ப்புகளுக்கு ஆபத்து நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதையும்,;

அவர் அறிவாரா?

(ஆ) (i) MME பட்டியலை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்குள் சேர்க்கப்பட்ட புதிய நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அங்கீகாரம் இல்லாததன் காரணமாக தொழில் வாய்ப்புகளை இழந்துள்ள இலங்கை தொழில்வாண்மையாளர்கள் தொடர்பாக அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

43/ '20

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய உள்ளூரதிகார சபை பிரதிநிதிகளின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(ii) அந்த பிரதிநிதிகளின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய உள்ளூரதிகார சபைகள் யாவை;

(iii) அந்த செயலமர்வுகள் நடைபெற்ற நாடுகள், நகரங்கள் மற்றும் கால எல்லைகள் வெவ்வேறாக யாவை;

(iv) இந்த ஒவ்வொரு செயலமர்விலும் பங்கேற்பதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) மேற்படி செயலமர்வுகளின் பின்னர் குப்பைகூள முகாமைத்துவத்திற்காக நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கிய உள்ளூரதிகார சபைகள் யாவை;

என்பதை அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

71/ '20

கௌரவ ஹேசா விதானகே,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டின் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கும் “சேவா பியச” அலுவலகம் ஒன்றை நிருமாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(iii) “சேவா பியச” அலுவலகமொன்றை நிருமாணிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(iv) இந்நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவுசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

4/ '20

கௌரவ புத்திக பத்திரண,— சுற்றுலா மற்றும் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் திகன, மஹபேரியதென்ன பிரதேசத்தில் விமான நிலையமொன்றை அமைப்பதற்கு கடந்த அரசாங்கத்தின் காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த மொத்த பணத்தொகை யாதென்பதையும்;

(iii) இக் கருத்திட்டத்திற்கு எத்தனை ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) இற்றைவரை நிர்மாணப் பணிகளுக்காக காணிகளைச் சுவீகரித்துக் கொள்ள செலவு செய்யப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இக்கருத்திட்டம் எதிர்வரும் காலத்தில் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பணத்தொகை யாதென்பதையும்;

(iii) பணிகளை நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

44/ '20

கௌரவ சமிந்த விஜேசிறி,— சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கழிவுகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்கின்ற, அது தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் யாவை;

(ii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இந்நிறுவனங்களின் அலுவலர்கள் கழிவுகள் தொடர்பாக வெளிநாட்டு கற்கைப் பயணங்களை மேற்கொண்டுள்ளனரா;

(iii) ஆமெனில், அவ்வலுவலர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் வெளிநாட்டுக் கற்கைகள் பற்றிய விபரங்கள் யாவை;

(iv) மேற்படி ஒவ்வொரு கற்கை நடவடிக்கைகளுக்கும் செலவிடப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) குறிப்பிட்ட கற்கைப் பயணங்களில் கலந்து கொண்ட அலுவலர்களின் அறிவினை அமைச்சின் நடவடிக்களுக்காக பயன்படுத்தப்பட்ட முறை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

72/ '20

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் காணப்படுகின்ற தொழிலின்மை விகிதமானது ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தின் பிரகாரம் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) குறிப்பிட்ட தொழிலின்மை பிரச்சினைக்காக வழங்கப்படும் தீர்வுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி தீர்வுகளின் மூலம் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் இலக்குகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2020 சனவரி 23, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

5/ '20

கௌரவ புத்திக்க பத்திரண,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி நகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள வெலிகந்த கிராமம் மண் சரிவுக்கு உள்ளாகும் பாரிய அச்சுறுத்தலைக் கொண்ட ஒரு பிரதேசமாக தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் பெயரிடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) வெலிகந்த கிராமவாசிகளுக்கு கண்டி, ஹந்தானை, கலஹ தோட்டத்தில் காணிகளும் வீடுகளை நிர்மாணித்துக்கொள்வதற்கான கடனும் வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இப்பிதேசத்தில் பாரிய இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு பழைய படிக்கட்டுகளுக்குப் பதிலாக வீதியொன்று வெட்டப்படுகின்றதென்பதையும்;

(iv) மேற்படி மண் வெட்டுவதற்காக உரிய அனுமதி பெறப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வீதி வெட்டப்படுவதை நிறுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வகையில் என்பதையும்;

(iii) இச்சட்ட விரோத செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட ஆட்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில் அது எவ்வகையில் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

2.

45/ '20

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை — பண்டாரவளை வீதியில் 2 ஆம் மைல் கல்லின் அருகாமையிலுள்ள பாலம் கடுமையாக சிதைவுற்றுள்ளதை அறிவாரா;

(ii) இப்பாலத்தினூடாக செல்லவேண்டியுள்ள கிராமங்களின் பெயர்கள் யாவை;

(iii) இப்பாலத்தின் பழமை பாதுகாக்கப்படக் கூடியவாறு நவீனமயப்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

73/ '20

கௌரவ ஹேஷா விதானகே,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பலாங்கொடை பிரதேச செயலகப் பிரிவில், வலேபொட, உடகந்த எனும் பெயரில் வயல் வெளியொன்று உள்ளதென்பதை அறிவாரா;

(ii) இந்த வயல் வெளியில் எத்தனை ஏக்கர் வயற் காணிகள் உள்ளன;

(iii) சுமார் 10 ஆண்டுகளாக இந்த வயல் வெளிக்கு நீர் கிடைக்காத காரணத்தினால் தரிசு நிலமாக மாறிவிட்டதை அறிவாரா;

(iv) ஆமெனில், இந்த வயல் வெளியில் பயிரிடுவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

6/ '20

கௌரவ புத்திக்க பதிரண,— கல்வி அமைச்சரையும் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமூக ஏற்றத்தாழ்வு மற்றும் வளங்கள் நியாயமான முறையில் பிரிந்து செல்லாமை காரணமாக இலங்கையிலிருந்து வறுமையை இல்லாதொழிப்பது கடினமாக அமைந்துள்ளதென்பதையும்;

(ii) தற்போது நடைமுறையிலுள்ள பாடத்துறைசார் கல்வி முறையின் மூலம் திறன்கள் விருத்தியடையாததன் காரணமாக சமகால சமூகத்திற்குப் பொருத்தமான தொழில்வாண்மையாளர்கள் உருவாகுவதில்லையெனவும்;

(iii) சட்டப் பொறிமுறையிலும் நீதி நிருவாகத்திற்கான நடவடிக்கைகள் துரிதமாகவும் முறையாகவும் இடம்பெறுவதில்லை என்பதையும்;

(iv) மேற்படி அனைத்து விடயங்களும் இளைஞர் சமுதாயத்தின் மீது நேரடியான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றதென்பதையும்;

(v) இளைஞர்கள் சமூகவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் மேற்படி விரக்தி மனநிலை தாக்கம் ஏற்படுத்துகின்றதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) பாடசாலைக் கல்வியை இடையில் நிறுத்துகின்ற இளைஞர் சமுதாயத்தை தொழிற்பயிற்சி அல்லது வேறு முறையான வாழ்வாதார வழிகளில் ஆற்றுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்தையும்;

(iii) பாடசாலைக் கல்வியினை தொழிற்சந்தைக்கு ஏற்றவகையில் திருத்துவதற்குப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில் அப்பிரேரணைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

46/ '20

கௌரவ சமிந்த விஜேசிறி,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள மத்திய அரசாங்கத்திற்கு மற்றும் மாகாண சபைக்கு சொந்தமான நீர்ப்பாசனத் திட்டங்கள் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற வயல்களின் பரப்பளவு, பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மாகாண சபைக்கு சொந்தமான நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் சாகுபடிசெய்யப்படுகின்ற வயல்களின் பரப்பளவு, பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை மத்திய அரசாங்கமும் மாகாண சபையும், பதுளை மாவட்டத்தில் நீர்ப்பாசனங்களின் பராமரிப்புக்காகவும் புனரமைப்பிற்காகவும் செலவு செய்துள்ள நிதித் தொகை, தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

74/ '20

கௌரவ ஹேஷா விதானகே,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரவளை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் லியன்கஹவெல, 7 ஆம் கட்டை, கடை வீதி என்ற பெயரில் மிகப் பழைமைவாய்ந்ததொரு இடம் காணப்படுகின்றது என்பதையும்;

(ii) மேற்படி இடம் கடந்த பல வருடங்களில் பிரதேச சபையினால் முறையாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) பிரதேச சபை ஊடாக இந்த இடத்தை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2020 சனவரி 24, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

7/ ' 20

கௌரவ புத்திக பத்திரண,— தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் இன ஒற்றுமையையும் சகவாழ்வையும் ஏற்படுத்துவதற்காக தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் பாடல்கள் போன்ற கலை ஊடகங்களைப் பயன்படுத்த முடியும் என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட துறைசார் விற்பன்னர்களை இதன்பால் ஈடுபடுத்துவதற்கு வேலைத்திட்டமொன்றை வகுப்பதன் மூலம் தரமான படைப்புகளை உருவாக்க முடியும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அரசாங்கம் சகவாழ்வை மையப்படுத்தி கலைப் படைப்புகளை உருவாக்குவதற்காக நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அத்தகைய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

47/ '20

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரவளை மாநகர சபைக்கு சொந்தமான வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வாகனத்தினதும் இலக்கம் யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வாகனமும் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் பிரிவு யாதென்பதையும்;

(iv) மாநகர சபைக்கு சொந்தமான வாகனங்கள் வேறு பிற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாயின், அவ்வாறு வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் களினதும் நிறுவனங்களினதும் பெயர்கள் யாவையென்பதையும்;

(v) பண்டாரவளை மாநகர சபைக்கு சொந்தமான வாகனங்களை வேறு தரப்பு களுக்கு வழங்கும் போது ஏதேனும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாயின் அது சம்பந்தமாக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

75/ '20

கௌரவ ஹேஷா விதானகே,— போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட புகையிரதப் பெட்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வாறு அகற்றப்பட்ட புகையிரதப் பெட்டிகளுள் திருத்திமைத்து ஓட்டத்தில் இணைக்கப்பட்ட புகையிரதப் பெட்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அந்த புகையிரதப் பெட்டிகளை திருத்தியமைத்த நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(iv) அதற்கென செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(v) ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட ஏனைய புகையிரத பெட்டிகளை மீளவும் ஓட்டத்தில் இணைப்பதற்கான அமைச்சின் வேலைத்திட்டத்தை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

8/ '20

கௌரவ புத்திக பத்திரண,— உயர்கல்வி தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கம் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மடிக் கணினிகளை வழங்கத் திட்டமிட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை யாது என்பதையும்;

(iii) இதற்கென கேள்விப் பத்திரம் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) அவற்றிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டபோது சமர்ப்பிக்கப்பட்ட விவரக் குறிப்புக்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்குவதற்கான கொள்வனவுகள் இடம்பெற்றுள்ளனவா என்பதையும் என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இலங்கையிலுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்க எதிர்பார்க்கும் திகதி யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

48/ '20

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள பிரிவெனாக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பிரிவெனாக்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பிரவெனாவிலும் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) பதுளை மாவட்டத்தில் பிரிவெனாக் கல்வியை மேம்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

76/ ' 20

கௌரவ ஹேஷா விதானகே,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மேட்டுக் காணிகளில்லாத ஆட்களுக்கு தமது வயல் காணியில் 10 பர்சஸ் அளவை நிரப்பி வீடொன்றை அமைத்துக்கொள்ள அனுமதி வழங்குதல் நீண்ட காலமாக நடைமுறையிலிருந்தென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) தற்போது மேட்டுக் காணிகளில்லாத ஆட்களுக்கு தமது வயல் காணியில் 10 பர்சஸ் அளவை நிரப்பி வீடொன்றை அமைத்துக்கொள்ள வழங்கப்பட்டிருந்த வாய்ப்பு இழக்கச் செய்யப்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆகையால் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் காணியில்லாத பெரும் தொகையான மக்கள் நிர்க்கதி நிலைமைக்கு உள்ளாகியுள்ளனரென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வயல் காணியில் 10 பர்சஸ் அளவை நிரப்புவதற்காக இன்றளவில் கமநல சேவைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பித்துள்ள ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆட்களுக்கு மிகத் துரிதமாக மேற்படி10 பர்சஸ் வயல் காணியை நிரப்பிக்கொள்ள வாய்ப்பளிப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2020 பெப்ரவரி 07, வெள்ளிக்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

பா. 1/ ' 20

கௌரவ புத்திக பத்திறண,— மன்னன் இராவணன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல்,— மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாத போதிலும், முறைசார்ந்த ஆய்வொன்றின் மூலம் அவர் தொடர்பாக நாட்டு மக்களின் மனப்பாங்கினை மேம்படுத்துவதற்கும் மன்னன் இராவணனுக்கு இருந்த அறிவினை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கும், இலங்கை வரலாற்றில் மறைந்துபோயுள்ள அத்தியாயமொன்றை வெளிக்கொண்டு வருவதற்கும் இயலுமாயுள்ளதால் புத்திஜீவிகள் குழுவொன்றின் மூலம் மன்னன் இராவணன் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

2.

பா. 2/ ' 20

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கைக்குத் தேவையான சீனியை நாட்டினுள்ளேயே உற்பத்தி செய்தல்,— சீனியை உற்பத்தி செய்வதற்குத் தேவையான வளங்களை இலங்கை தன்னகத்தே கொண்டிருப்பதால், சிறந்த முகாமைத்துவத்துடன், வினைத்திறனாகவும் திட்டமிட்ட வகையிலும் செயலாற்றி நாட்டுக்குத் தேவையான சீனியை உற்பத்தி செய்வதற்கும் சீனியை சுத்திகரிப்பதற்கும் தேவையான தொழிற்சாலைகளை அரசாங்கம் தாபித்து சீனிக் கைத்தொழிற் துறையை பாதுகாத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

3.

பா. 3/ ' 20

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலைப் பிள்ளைகளின் முக்கியத்துவத்தை சமூகமயமாக்கல்,— பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் பாடசாலை வான் சாரதிகளுக்கு பிள்ளைகளின் முக்கியத்துவம் பற்றி சமூகவியல் மற்றும் உளவியல் முறையியல்களைக் கொண்டு எளிதாக விளக்கி, நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக பிள்ளைகளை சமூக சவால்களிலிருந்து எவ்வாறு பாதுகாப்பது என்பதைப் பற்றிய கலந்துரையாடலொன்றை நடத்துவதற்காக தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

4.

பா. 4/ ' 20

கௌரவ புத்திக பத்திறண,— புலமை சார்ந்த வறுமையை ஒழித்தல்,— பௌதீக வர்த்தகப் பொருட்கள் புழங்கும் வேகத்திற்கு நிகராக அறிவு, புலமை மற்றும் மானிட ஒழுக்க விழுமியங்கள் மக்களை சென்றடையாமை காரணமாக அறியாமை தலைதூக்கியுள்ளதன் மூலம், புலமைசார்ந்த வறுமை எமது நாட்டில் காணப்படும் பிரதான பிரச்சினையாக இருந்த போதிலும் அது தொடர்பாக நாட்டினுள் குறைந்தளவு கவனமே செலுத்தப்படுவதனால் நாட்டு மக்களின் புலமைசார்ந்த வறுமையை இல்லாமல் செய்வதற்காக, சகல வயதுப் பிரிவினரும், உள்ளடங்குகின்ற வகையில் முறைசார்ந்த விதத்தில் திட்டமிடப்பட்ட தேசிய நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

5.

பா. 7/ ' 20

கௌரவ புத்திக பத்திரண,— பாராளுமன்ற கற்கை நிலையமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கை மற்றும் பல்வேறுபட்ட நாடுகளின் பாராளுமன்ற நடைமுறைகள், பாராளுமன்ற வரலாறு மற்றும் அரசியல் முறையியல்கள் குறித்து பாடசாலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள் மற்றும் ஏனைய கல்விபெறுவோர்களுக்கு கற்பதற்கான வசதிகளை வழங்கக்கூடிய வகையிலான பாராளுமன்றக் கற்கை நிலையமொன்று பாராளுமன்றத்தினுள் தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

6.

பா. 8/ '20

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கையிலுள்ள பிள்ளைகளின் சுகாதாரத்திற்கு ஊடகங்கள் மூலமாக இடம்பெறுகின்ற அழுத்தங்களைக் குறைத்தல்,— அதிகமாக குளுக்கோஸ், கொழுப்பு மற்றும் உப்பு அடங்கிய உணவு வகைகளை உட்கொள்வதால் நாட்டிலுள்ள பிள்ளைகள் மத்தியில் உடற்பருமன், இருதய நோய்கள், உயர் இரத்த அழுத்தம் போன்ற தொற்றா நோய்கள் பரவி வருகின்ற அதேவேளை இத்தகைய பாதகமான உணவு வகைகள் தொடர்பில் பிள்ளைகளைத் தூண்டும் விதமாக ஊடகங்கள் மூலமாக பிள்ளைகளை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற வர்த்தக விளம்பரங்கள் அதற்கான பிரதான காரணமாக அமைவதால் சிறுவர் உணவு தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற வர்த்தக விளம்பரங்களை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

7.

பா. 9/ ' 20

கௌரவ புத்திக பத்திறண,— சிக்கலான உலகளாவிய சந்தையின் காரணமாக மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைக் குறைத்தல்,— உலகமயமாக்கலின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட உலக வர்த்தக முறைகள் மனிதனின் மனதை ஆக்கிரமித்துள்ளதன் காரணமாக அவன் பரம்பரை பரம்பரையாகக் கொண்டு வந்த ஒழுக்க விழுமியங்களும் வளர்ச்சியடைந்த தத்துவக் கருத்துக்களும் மனித மனங்களிலிருந்து பறித்தெடுக்கப்படுதல் தற்காலத்தில் இலங்கையர்களுக்கும் பொதுவானதென்பதால், சந்தைப் பொருளாதாரத்தினுள் கட்டியெழுப்பப்படுகின்ற சிக்கலான வாழ்க்கை முறையையும் அதனைத் தொடர்ந்து எழுகின்ற சிக்கலான சமூகப் பிரச்சினைகளையும் தீர்த்துக்கொண்டு அமைதியான வாழ்க்கை முறையொன்றை நோக்கிச் செல்வது எவ்வாறு என்பது பற்றி மக்களை அறிவூட்டுவதற்குரிய வேலைத்திட்டமொன்றும் அறிவார்ந்த கருத்தாடலொன்றும் நாட்டினுள் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

8.

பா. 10/ ' 20

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றாடலைப் பாதுகாப்பதன் மூலம் ஆரோக்கியமான நாடொன்றைக் கட்டியெழுப்புதல்,— இன்று இலங்கையில் சுற்றாடல் மாசடைதல் அதிகரித்துள்ளமையால் நீர் மற்றும் உணவுகளில் கதிரியக்கத் தன்மை அதிகரித்துள்ளதோடு, எதிர்காலத்தில் மனிதனுக்குப் பீடிக்கின்ற ஒருசில நோய்களின் நோய்க் காரணிகளைக்கூட கண்டுபிடிப்பது சிரமமானதாக அமையலாம் என்பதால், இது தொடர்பாக மேலும் ஆய்வு செய்வதற்காக கல்விமான்கள் குழுவொன்றை நியமித்து அறிக்கையொன்றைப் பெற்று, அதன் விதப்புரைகளை அமுலாக்குவதன் ஊடாக நாட்டிலுள்ள மக்களின் ஆரோக்கியம் உறுதிசெய்யப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

9.

பா.11/ ' 20

கௌரவ புத்திக பத்திறண,— நாட்டின் பாதுகாப்புக்கு கமத்தொழிலைப் பேணுதல்,— முதலாளித்துவத்தின் மூன்றாவது கட்டமாகிய இரண்டாவது உலக மகா யுத்தத்துக்கு பிற்பட்ட காலத்தில் கமத்தொழில் வாழ்க்கை முறையானது பசுமைப் புரட்சியுடன் முழுமையாகவே மாற்றமடைந்த காரணத்தினால் தற்போதைய உலகளாவிய சமூகம் எதிர்கொண்டுள்ள சுற்றாடல் மாசடைதல், ஆரோக்கியத்தை இழத்தல் மற்றும் தூய்மையான உணவு காணப்படாமை, ஆகிய இடர்காண் நிலைமைகளிலிருந்து இலங்கையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மக்களை நிலைபேறான கமத்தொழில் பிரயோகங்களுக்கு ஊக்குவிப்பதன் மூலமும் விவசாயிகளைப் பாதுகாக்கும் அரச கொள்கைகளை நாட்டினுள் தாபிப்பதன் மூலமும் நாட்டின் எதிர்காலம் பேணப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

10.

பா. 12/ ' 20

கௌரவ புத்திக பத்திறண,— தாய், சேய் போஷாக்கின்மையை ஒழித்தல்,— இலங்கையில் எடைகுறைந்த மகப்பேற்று வீதம் 25% எனும் உயர் பெறுமானத்தை கொண்டுள்ளதோடு, அதற்கான பிரதான காரணியாக அமைவது ஊட்டச்சத்துமிக்க உணவுப் பற்றாக்குறையே என்பதால், தாய், சேய் போஷாக்கின்மையை ஒழிப்பதற்குத் தேவையான ஊட்டச்சத்துமிக்க உணவுகளை வறியோர்களுக்கு வழங்குவதை முதன்மையாகக்கொண்ட வேலைத்திட்டமொன்று அமுலாக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

11.

பா. 13/ '20

கௌரவ சமிந்த விஜேசிறி,— கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அமைத்தல்,— இலங்கையின் அநேகமான கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகள் மிகக் குறைந்த பொருளாதார நிலையிலுள்ளதால், அத்தகைய விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

12.

பா. 14/ '20

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிராந்திய ஊடகவியலாளர்களின் தொழில்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றைத் தாபித்தல்,— ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு தகவல்கள் முக்கிய காரணிகளாக இருப்பதுடன் இவ்வாறான தகவல்களை அளிப்பதில் முக்கிய பங்காற்றி வரும் பிராந்திய ஊடகவியலாளர்களின் தொழில் ரீதியான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றை தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

13.

பா. 15/ '20

கௌரவ ஹேஷா விதானகே,— உமா ஓயா அபிவிருத்தி கருத்திட்டத்தின் விளைவாக பண்டாரவளை, லியன்கஹவெல பிரதேசத்தில் வீடுகள், காணிகள் உள்ளிட்ட சொத்துக்களை இழந்துள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— உமா ஓயா உள்ளிட்ட அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக நிலக்கீழ் சுரங்கங்கள் அகழப்படுவதால் பண்டாவளை, லியன்கஹவெல பிரதேசத்திலுள்ள மக்கள் தங்களது வீடுகள், காணிகள் உள்ளிட்ட சொத்துக்களை இழந்து தற்போது மூன்று வருட காலம் கடந்துள்ள நிலையில், இடம்பெயர்ந்துள்ள இம்மக்களுக்கு இற்றைவரை எவ்வித இழப்பீட்டுத் தொகையோ அல்லது வேறு நிவாரணமோ கிடைக்கவில்லை என்பதால் இம்மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாாளுமன்றம் பிரேரிக்கின்றது.

14.

பா. 16/ '20

கௌரவ ஹேஷா விதானகே,— புகையிரதம் மூலம் காய்கறிகளை எடுத்துச்செல்வதற்கான திட்டமொன்றை ஆரம்பித்தல்,— பதுளை மாவட்டம் உள்ளிட்ட காய்கறி உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களிலிருந்து காய்கறி உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை குறைந்த செலவிலும் விரயத்தினை இயன்றளவு குறைக்கும் வகையிலும் புகையிரதம் மூலமாக நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கு எடுத்து செல்வதற்கான திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

15.

பா. 17/'20

கௌரவ ஹேஷா விதானகே,— உமா ஓயா அபிவிருத்தித்திட்டம் காரணமாக நீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்தல்,— உமா ஓயா அபிவிருத்தித்திட்டம் காரணமாக தற்போது ஏழு பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 8394 குடும்பங்கள் நீர்ப் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளதனால் அந்த மக்களுக்கான நீர் வசதியை வழங்குவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை நடமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

16.

பா. 18/ '20

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்,— பாதகமான காலநிலை காரணமாக தொடர்ச்சியாக வெள்ளப்பெருக்கினால் அனர்த்தத்துக்கு உட்படும் இரத்தினபுரி மாவட்டத்தின் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

17.

பா. 19/ '20

கௌரவ ஹேஷா விதானகே,— எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்குத் தனித்துவமான மரபுரிமைகளைப் பாதுகாத்தல்,— கலை, விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் சப்ரகமுவாவுக்கு உரித்தான தனித்துவமிக்க பண்புகள் காணப்படுவதுடன், இன்று வர்த்தகமயமாக்கல் காரணமாக மேற்படி தனித்துவமிக்க பண்புகள் அழிவடைகின்ற அச்சுறுத்தல் காணப்படுவதனால் எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்கு தனித்துவமிக்க மரபுரிமைகளை பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

18.

பா. 20/ '20

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களை குறைக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயார் செய்தல்,— தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளுக்கு அமைய இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படுகின்ற அச்சுறுத்தலைக் கொண்ட பல இடங்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதனால் மேற்படி நிலைமைகளை குறைப்பதற்காக ஏதேனுமொரு நிகழ்ச்சித்திட்டத்தை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.